வகுப்பு : 6-ம் வகுப்பு

பாடம் : தமிழ்

## இயல் - 4
## கவிதைப்பேழை
## மூதுரை

### I. மனப்பாடப்பகுதி

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையன் _ மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு.

- ஔவையார்

### I. குறுவினா

1. கற்றவரின் பெருமைகளாக மூதுரை கூறுவன யாவை?

மன்னனையும் குறை இல்லாமல் கற்றவரையும் ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தால் மன்னனைவிடக் கற்றவரே சிறந்தவர்.

மன்னனுக்குத் தன் நாட்டில் மட்டுமே சிறப்பு. கல்விக் கற்றவர்க்குக் சென்ற இடங்களில் எல்லாம் சிறப்பு.

## கவிதைப்பேழை
## துன்பம் வெல்லும் கல்வி

### I. குறுவினா

1. நாம் யாருடன் சேரக்கூடாது?

தன்மானம் இல்லாத கோழைகளுடன் நாம் சேரக்கூடாது.

2. எதை நம்பி வாழக்கூடாது?

மற்றவர்களின் செல்வதை (கைப்பொருளை) நம்பி வாழக்கூடாது.

3. நாம் எவ்வாறு வாழவேண்டும் எனப் பட்டுக்கோட்டையார் கூறுகிறார்?

மேலான அறிஞர்கள் கூறிய அறிவுரைகளின்படி வாழவேண்டும் என பட்டுக்கோட்டையார் கூறுகிறார்.

4. நாம் எவ்வாறு வாழ்ந்தால் பெருமை பெறலாம்?

மேலான அறிஞர்கள் கூறிய அறிவுரைகளின்படி வாழவேண்டும். அதன் மூலம் வெற்றிகளையும் விருதுகளையும் பெருமைகளையும் பெறலாம்.

## உரைநடைப் பகுதி

## கல்விக்கண் திறந்தவர்

I. குறுவினா

1. காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் யாவை?

காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்கள்:

- பொறியியல் கல்லூரி
- மருத்துவக் கல்லூரி
- கால்நடை மருத்துவக் கல்லூரி
- ஆசிரியப் பயற்சி நிறுவனங்கள்

ஆகியன ஆகும்.

2. காமராசர் முதல்வராகப் பொறுப்பேற்றதும் கல்விக்காகச் செய்த முதல் பணி யாது?

காமராசர் முதல்வராகப் பொறுப்பேற்றதும் மூடப்பட்டு இருந்த ஆறாயிரம் தொடக்கப்பள்ளிகளை உடனடியாகத் திறக்க ஆணையிட்டார்.

3. காமராசரின் சிறப்புப் பெயர்கள் யாவை?

காமராசரின் சிறப்புப் பெயர்கள்:

- பெருந்தலைவர்
- படிக்காதமேதை
- கர்மவீரர்
- கருப்புக்காந்தி
- ஏழைப்பங்காளன்
- தலைவர்களை உருவாக்குபவர்

II. சிறுவினா

1. காமராசரின் கல்விப் பணிகள் குறித்து எழுதுக

- காமராசர் முதல்வராகப் பொறுப்பேற்றதும் மூடப்பட்டு இருந்த ஆறாயிரம் தொடக்கப்பள்ளிகளை உடனடியாகத் திறக்க ஆணையிட்டார்.
- இலவசக் கட்டாயக் கல்விக்காக சட்டத்தை இயற்றித் தீவிரமாக நடைமுறைப் படுத்தினார்.
- மாணவர்கள் பசியின்றிப் படிக்க மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தார்.
- பள்ளிகளின் ஏற்றத்தாழ்வின்றிக் குழந்தைகள் கல்விக் கற்கச் சீருடைத் திட்டத்தை அறிமுகம் செய்தார்.
- பள்ளிகளின் வசதிகளைப் பெருக்கப் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தினார்.
- பொறியியல் கல்லுரி, மருத்துவக் கல்லுரி, கால்நடை மருத்துவக் கல்லுரி, ஆசிரியப் பயற்சி நிறுவனங்கள் ஆகியவற்றைப் புதிதாக தொடங்கினார்.

விரிவானம் (துணைப்பாடம்)

நூலகம் நோக்கி

அண்ணா நூலகத்தைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக

- ஆசியாவிலேயே இரண்டாவது பெரிய நூலகம் அண்ணா நூலகமே ஆகும். இது தரைத் தளம் மற்றும் எட்டு அடுக்குகளைக் கொண்டது.
- நகரும் படிக்கட்டு வழியாக முதல் தளத்திற்குச் சென்றால் அங்கே குழந்தைகளுக்கான சிறப்பான பகுதி உருவாக்கப்பட்டுள்ளது.
- இரண்டாம் தளத்தில் தமிழ் நூல்களும், மூன்றாம் தளத்தில் கணினி, அறிவியல், தத்துவம், அரசியல் நூல்கள் ஆகியனவும் உள்ளன.
- நான்காம் தளத்தில் பொருளியல், சட்டம், வணிகவியல், கல்வி ஆகியவை குறித்த நூல்கள் உள்ளன.
- ஐந்தாம் தளத்தில் கணிதம், அறிவியல், மருத்துவம் குறித்த நூல்களும், ஆறாம் தளத்தில் வரலாறு, சுற்றுலா குறித்த நூல்களும் இடம் பெற்றிருக்கின்றன.

- ஏழாம் தளத்தில் பழைமையான ஓலைச்சுவடிகளும், அனைத்துவகைப் போட்டித் தேர்வுக்குத் தேவையான நூல்களும் உள்ளன.
- இங்கே மின் நூலகமும் உள்ளது. அனைத்துத்துறை சார்ந்த தரமான மின் நூல்களும் மின் இதழ்களும் உள்ளன.
- எட்டாம் தளத்தில் நூலகத்தின் நிர்வாகப்பிரிவு இயங்குகிறது.

## கற்கண்டு
## இன எழுத்து

I. குறுவினா

1. இன எழுத்துகள் என்றால் என்ன?

எழுத்துகள் பிறக்கும் இடம், ஒலிக்கும் முயற்சி ஆகியவற்றில் ஒற்றுமை உள்ள எழுத்துகள் இன எழுத்துகள் எனப்படும்.